[2016 பிப்ரவரி 20

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**102—**

## சொந்தக் கட்டடம்

*61167—**திரு. கே.பி. பரமசிவம்:**

*மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சியிலுள்ள சுற்றுச்சூழல் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகவை 68, பிறந்தநாள் காணுகிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி, என்றும் பல நூறு ஆண்டு காலம் நோய்நொடி இல்லாமல் வாழ்ந்து, என்றும் இந்தத் தாய்த் திருநாட்டை ஆள வேண்டும், அம்மா அவர்கள் நிறைந்து வாழ வேண்டும்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகவை 68, பிறந்தநாள் காணுகிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி, நிறைந்து இந்தத் தமிழகத்திலே நீடூழி காலம் வாழ வேண்டும், நோய்நொடி இல்லாமல் வாழ வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இந்தத் தாய்த் திருநாட்டை என்றும் நிரந்தரமாக ஆள வேண்டுமென்று இறைவனை வேண்டி, வாழ்த்த வயதில்லை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களை வணங்குகிறேன்.

2016 பிப்ரவரி 20]

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், பொள்ளாச்சி by–pass road, பல்லடத்தில் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம், மாவட்ட நிருவாகத்தின்மூலம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**103—**

### மாணவர் விடுதி

***48104—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, கடியாபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

திருமயம் தொகுதி, கடியாபட்டியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.